## முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

தமிழ்

வகுப்பு - ஆறு - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 10 × 1 = 10

1. மனித உருவம் கொண்ட ரோபோ ______________ உயரம் இருந்தது.
அ) 6 அடி ஆ) 7 அடி இ) 8 அடி
2. நீலம் + வான் – என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______________
அ) நீலம் வான் ஆ) நீளம்வான் இ) நீலவான்
3. நண்பர்களுடன் ______________ விளையாடு.
அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு இ) தனித்து
4. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ______________
அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா
5. 'கிணறு' – என்பதைக் குறிக்கும் சொல் ______________
அ) ஏரி ஆ) கேணி இ) குளம்
6. கதிரவனின் மற்றொரு பெயர் ______________
அ) ஞாயிறு ஆ) திங்கள் இ) புதன்
7. 'இடப்புறம்' – என்ற சொல்லைப் பிரிக்க கிடைக்கும் சொல் ______________
அ) இடன் + புறம் ஆ) இடது + புறம் இ) இடப் + புறம்
8. எட்டு + திசை என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ______________
அ) எட்டுத்திசை ஆ) எட்டுதிசை இ) எட்டிதிசை
9. அவன் எப்போதும் உண்மையே ______________
அ) உரைக்கின்றான் ஆ) உரைகின்றான் இ) உறைகின்றான்
10. உடல் நோய்க்கு ______________ தேவை.
அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

11. அணுவைப் பிளந்து ______________ எடுக்கிறான்.
12. இந்தியாவின் பறவை மனிதர் ______________
13. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை ______________

14. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ______________

15. உடல் உறுப்பினை மாற்ற ______________ கண்டுபிடித்தான்.

**III. எதிர்ச்சொல் தருக.** 4 × 1 = 4

16. இன்பம் 17. இரவு 18. வறுமை 19. சுத்தம்

**IV. மனப்பாடப்பாடல்.** 4 + 2 = 6

20. பாரதியாரின் 'காணி நிலம்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

21. 'தற்று' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**V. வினாவிற்கு விடையளி.** 1 × 5 = 5

22. குடிநீர் வசதி வேண்டி விண்ணப்பம் வரைக.

**VI. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** 7 × 2 = 14

23. மொழி இறுதியில் வராத மெய்கள் என்னென்ன?

24. ரோபோ உருவாக அடிப்படையாக அமைந்த நிகழ்வு யாது?

25. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?

26. எழுத்துகளுக்கு தொடக்கமாக அமைவது எது?

27. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?

28. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?

29. நீங்கள் அறிந்த தமிழகக்காப்பியங்களின் பெயர்களைக் கூறுக.

30. சிட்டுக்குருவிகளின் அழிவுக்கான காரணங்களை பட்டியலிடுக.

**VII. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** 4 × 3 = 12

31. தமக்கு பெருமகிழ்வு அளித்ததாக அப்துல் கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?

32. இயந்திர மனிதனின் பயன்களை விளக்குக.

33. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?

34. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

35. கே. சிவன் பற்றி சிறு குறிப்பு வரைக.

**VIII. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.** 4 × 1 = 4

36. தானியங்கி 37. உற்பத்தி 38. வெளிநாடு 39. மீனாட்சி